(அ) அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு அரசால் அளிக்கப்படும் மானியத் தொகை தணிக்கை செய்யப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் பேரவைமுன் வைக்கப்படுகிறதா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டத்தின்படி தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை பேரவைமுன் வைக்கத் தேவையில்லை. எனவே, வைக்கப்படுவதில்லை.

திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொகுதியில் பல்கலைக் கழகம் இருக்கிறது என்றால் அந்தப் பல்கலைக் கழகத்திற்கும் பொது மக்களுக்கும் நிறையத் தொடர்புள்ளது. அங்கு நிகழும் பிரச்சினைகளைத் தீர்க்கும் அளவிற்கு பலகலைக் கழகங்கள் அமைந்துள்ள தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் ஆட்சிமன்றக் குழுவில் இடம் பெற அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொகுதியிலே இருப்பவர்களைத்தான் நியமிக்க வேண்டுமென்று சொல்ல முடியாது. சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கே நியமிக்கப்படுகிறார்கள். அதில் கேள்வி கேட்ட உறுப்பினரும் இடம்பெற வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 220, டாக்டர் வெ. சரோஜா; மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

220—

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் நகை மதிப்பீட்டாளர் நியமனம் செய்தல்

*** 19803—டாக்டர் வெ. சரோஜா :**

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலும், நகை மதிப்பீட்டாளர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் பணியாளர்களின் எண்ணிக்கை, நிதி நிலைமை, நகைக் கடன் கொடுக்க உள்ள வாய்ப்பு, நகைக் கடன் கொடுக்கும் அளவு ஆகியவற்றின் அடிப்படையில் முழுநேர நகை மதிப்பீட்டாளர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள். வாய்ப்புகள் குறைவாக உள்ள வங்கிகளில் தரகு அடிப்படையிலும் (Commission Basis-ல்) நகை மதிப்பீட்டாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் எத்தனை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் உள்ளன? அனைத்து வங்கிகளிலும் நகைக் கடன்கள் கொடுக்கப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டி ஆசை அதிகமுள்ள அடகுதாரர்களிடமிருந்து மக்களைக் காப்பாற்ற கூட்டுறவு நிறுவனங்கள் மாநிலம் முழுவதும் நகை ஈட்டின் பேரில் கடன் வழங்கி, மக்கள் கடன் தேவைகளை அவ்வப்போது நிறைவு செய்கின்றன. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக, நகர வங்கிகள், உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நகைக் கடன்களை வழங்கி வருகின்றன. தமிழ்நாட்டிலுள்ள 4,655 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 3,646 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் நகைக் கடன்களை வழங்கி வருகின்றன. ஒரு சவரனுக்கு ரூ. 2,200 வீதம், ஒரு தனிநபருக்கு 25 ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் தங்க நகைகளின் மீது, அடமானத்தின் மீது கடன்கள் வழங்கப்படுகின்றன. அதைக்கூட தமிழர்கள் செய்த புண்ணியத்தால் வந்துதித்த டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினம் ஒரு சவரனுக்கு 2,200 ரூபாய் கடன் என்பதை மாற்றி அதை 2,400 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். அப்படியே 25 ஆயிரம் ரூபாய் ஒரு தனிநபர் பெறுகின்ற கடனையும், அதிகமாக ஆக்கி 40 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள் என்கிற செய்தியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.20

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வங்கிகளில் எந்த அடிப்படையில் நகைக் கடன்கள் கொடுக்கப் படுகின்றன? கொடுக்கப்பட்ட நகைக் கடன்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் வசூலிக்க அரசு ஏதேனும் சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ள உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகைகள் மீது தரப்படுகின்ற கடன்கள் எல்லாம் நகைகளினுடைய தரத்தைப் பொறுத்தும், அதனுடைய எடையைப்

பொறுத்தும் அந்த அளவில் மதிப்பீடு செய்யப்பட்டு கடன் தொகை வழங்கப்படுகிறது. தரப்படுகிற கடன் இந்தியத் திருநாட்டிலேயே தமிழகத்தில்தான் அதிகமாகத் திருப்பிச் செலுத்தப்படுகின்றன; அதிகமாகக் கடன்களும் தரப்படுகின்றன என்பதை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நேற்றையதினம்கூட நாபார்ட் வங்கியின் தலைவர் தமிழகத்திற்கு வந்திருந்தபோது சென்னையில் பத்திரிகையாளர்களிடம் பேசுகிறபோது கூறியது பற்றி இன்று காலையில் வந்திருக்கிற செய்தியில் சொல்லப் பட்டிருக்கிறது. " . . States such as Tamil Nadu had logged good performances in advances and recovery rates" *(மேசையைத் தட்டும் ஒலி)* என்று சொன்னதோடு நில்லாமல் this has been made " . . even without elected bodies . . ." என்கின்ற அந்தக் கருத்தினையும் சொல்லி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமல் இருக்கிற நேரத்திலே கூட தமிழகத்தில்தான் அதிகமாக நகைக் கடன்களையும், மற்ற கடன்களையும் கொடுத்திருக்கிறார்கள்; கொடுக்கப்பட்ட கடன்களையும் அதிகமாகத் திரும்பப் பெற்றிருக்கிறார்கள் என்கின்ற அந்தக் கருத்தினையும் கூறியதாக இன்றைய பத்திரிகையில் வந்திருக்கிறது என்பதை அவையிலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஜெயக்குமார்.

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் மூலமாக எவ்வளவு கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது, எவ்வளவு பேர் திருப்பிச் செலுத்தியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நகைக் கடன்களைப் பொறுத்தமட்டில் *1991-92* ஆம் ஆண்டில் *843.70* கோடி ரூபாய்க்கும் *1992-93* ஆம் ஆண்டில் *1080.28* கோடி ரூபாய்க்கும், *1993-94* ஆம் ஆண்டில் *1186* கோடி ரூபாய்க்கும் நகைக் கடன்களாக நாம் கொடுத்திருக்கிறோம். இன்றையதினம் *1993-94*-ல் நகைக் கடன்களாகக் கொடுக்கப்பட்ட கடன்கள் திரும்பப்பெறப்பட்ட அளவு *74.8* விழுக்காடுகள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(ஐந்தாம் பட்டியல்)

1 - மாநில நிர்வாக தீர்ப்பாயத்தில் அரசு வழக்கறிஞர்களை அதிகரித்தல்.

வினா எண் *3408*-திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—